# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | | |
| | : | Prosecution - | PW-1 | |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சரண்யா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1**ம் எதிரி கனகராஜ்**, 2**ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3**ம் எதிரி பிரகாஷ்**, 4**ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5**ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது புகளூர் வட்டம், கார்வழி கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 10.02.2018 அன்று கரூர் வட்டம், மேலப்பாளையம் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது எனது கிராம உதவியாளராக சாட்சி சிவபிராஷ் பணிபுரிந்து வந்தார். மதியம் 1.00 மணியளவில் நான் என்னுடைய அலுவலகத்தில் அலுவலில் .......

இருந்தபோது, என் உதவியாளர் சிவபிரகாஷ் வந்து, எம்.வெள்ளாளப்பட்டி, கீரிக்கல்பாதையில் சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஆண்பிரேதம் கிடப்பதாக தகவல் கூறினார். அதன்பேரில் நானும், என் உதவியாளர் சிவபிரகாஷ் என்பவரும் எம்.வெள்ளாளப்பட்டி, கீரிக்கல் பாதைக்கு சென்று பார்த்தபோது, தங்கவேல் என்பவர் காட்டில் சுமார் 25 – 35 வயது மதிக்கத்தக்க ஒரு ஆண்பிரேதம் வலதுபக்க கழுத்திலும், பின்தலையிலும், தாடையிலும் வெட்டுப்பட்டு, இறந்துகிடந்தார். அந்த பிரேதத்தின் இடது கையில் KS தன்யாஸ்ரீ A என்ற பச்சை குத்தப்பட்டிருந்தது. இறந்துபோன நபர் புளூ கலர் ஜீன்ஸ் மற்றும் ரோஸ் கலர் சட்டை அணிந்திருந்தார். அக்கம் பக்கத்திலிருந்தவர்களை விசாரித்ததில் இறந்தவர் யாரென்று தெரியவில்லை என்று கூறினார்கள். எனவே நானும், என் உதவியாளரும் பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம். அந்த புகாரை நான் எழுதி கொடுத்தேன். அந்த புகார் அ.சா.ஆ.1. அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது. எனது புகாரின் பேரில் பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் முதல்தகவல் அறிக்கை தயார் செய்து, எனக்கு நகல் கொடுத்தனர். அதில் நான் கையெழுத்திட்டு வாங்கினேன். முதல்தகவல் அறிக்கையில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.2.

பின்னர், சம்பவ இடத்திற்கு 2.45 மணிக்கு நானும், காவல் ஆய்வாளர், எனது உதவியாளர் ஆகியோர் சென்றோம். அங்கு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தார். பார்வை மகஜரில் நானும், எனது உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பார்வை மகஜர் என்னிடம் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.3. பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னடையது. இரண்டாவது கையெழுத்து எனது உதவியாளருடையது.

பின்னர், பிரேதம் கிடந்த இடத்திலிருந்து 10 அடி தூரத்தில் கிடந்த மூன்று பாக்கு தட்டுகளையும், காலி பிளாஷ்டிக் டம்ளர்கள் மூன்று, காலியான தண்ணீர் பாக்கெட்டுகள் மூன்று, அக்வார்டு பிராந்தி பாட்டில்கள் மூன்று, சாம்பல் நிற கார் மேட் ஒன்று, பிரேதம் கிடந்த இடத்தில் இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். கார்மேட் கிழிந்த .....

நிலையில் இருந்தது. அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4. ஆய்வாளர் என் முன்னிலையில் கைப்பற்றிய மூன்று பாக்குதட்டுகள் சா.பொ.1 வரிசை. காலி பிளாஷ்டிக் டம்ளர்கள் மூன்று சா.பொ.2 வரிசை. காலியான தண்ணீர் பாக்கெட்டுகள் மூன்று சா.பொ.3 வரிசை. , அக்வார்டு பிராந்தி பாட்டில்கள் மூன்று சா.பொ.4 வரிசை, கிழிந்த சாம்பல் நிற கார் மேட் ஒன்று சா.பொ.5, இரத்தம் படிந்த மண் சா.பொ.6, இரத்தம் படியாத மண் சா.பொ.7.

இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தனது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-2** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ்**, 4** ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, சுந்தரவேல்புரம் மேற்கு, கதவு எண். 10/5 ல் வசித்து வந்து, இனிப்புக்கடையில் வேலை பார்த்து வருகிறேன். என் உடன்பிறந்தவர்கள் மூர்த்தி, செந்தில்குமார், சுப்புராஜ் ஆகிய மூன்று தம்பிகளும், தங்கைகள் சுப்புலெட்சுமிட, புஷ்பவள்ளி, இந்திரா ஆவார். என் கடைசி தம்பி சுப்புராஜ் இவ்வழக்கில் இறந்துபோனவர். என் தம்பி சுப்புராஜிற்கு ஜெயலலிதா

என்பவர் மகள் அழகுலெட்சுமி என்பவருக்கும் திருமணமானது. சுப்புராஜ், அழகுலெட்சுமி ஆகியோருக்கு தன்ஸ்ரீயா, கௌசிக் என்ற மகனும் உள்ளனர். என் தம்பியும், அவர் மனைவி குழந்தைகளும் திருப்பூர் மாவட்டம், கணக்கம்பாளையத்தில் குடியிருந்து வந்தனர். என் தம்பி இனிப்புக்கடை மற்றும் கூல்ட்டிரிங்ஸ் கடை நடத்தி வந்தார். என் தம்பி அவரது இடது கையில் KS தன்யாஸ்ரீ A என பச்சை குத்தியிருந்தார். என் தம்பி கடைக்கு அருகில் கறிக்கடை இருந்தது. என் தம்பி 2018 ம் வருடத்திற்கு முன்பு தனக்கும், தன் மனைவிக்கும் இடையே பிரச்சினை உள்ளது என சொன்னார். என் தம்பி அவரது மனைவியை அடித்ததில், என் தம்பி மனைவி காதில் அணிந்திருந்த கம்மல் நெளிந்துவிட்டது என என் தம்பி என்னிடம் கூறினார். என் தம்பி மனைவி அழகுலெட்சுமி என்பவர் அவரது சொந்த ஊரான கோவில்பட்டி வட்டம், கொப்பம்பட்டிக்கு வந்துவிட்டார். என் தம்பிக்கும், அவருக்கும் உள்ள பிரச்சினை காரணமாக அழகுலெட்சுமி மட்டும் ஊருக்கு திரும்பி விட்டார். என் தம்பிமனைவியிடம் கேட்டதற்கு, அவர் என் தம்பி பத்து பவுன் நகையுடன் வேறு பெண்ணை கூட்டிச்சென்றுவிட்டார் என்றும், அவரை பல இடங்களில் தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்று 2020 ம் வருட வாக்கில் கூறினார். 2018 முதல் 2020 வரை என் தம்பி மனைவியும், என் தம்பியின் மாமியாரும் கரூரில் வாழ்ந்து வந்தனர். 2018 முதல் 2020 வரை நானும், என் உறவினர்களும் பெங்களூர், மெட்ராஸ், ஆந்திரா, திருப்பூர் ஆகிய இடங்களில் தேடிப்பார்த்தும், என் தம்பி சுப்புராஜ் கிடைக்கவில்லை. 12.04.2021 அன்று கரூரிலிருந்து போலீசார் தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டிக்கு வந்து, அழகுலெட்சுமியையும், அவரது அம்மா ஜெயலலிதாவையும் கைது செய்தனர். எனக்கும் போலீசார் கைது செய்தனர். நான் மறுநாள் காலை கொப்பம்பட்டிக்கு வந்தேன். பின்னர் அன்றைய தினம் இரவு கரூர் போலீஸ்டேசனுக்கு வந்தேன். பின்னர், என் தம்பியை கொலை செய்த இடத்தையும், என் தம்பியை புதைத்த இடத்தையும் போலீசார் என்னிடம் காண்பித்தனர். என் தம்பியின் பிரேதம் உள்ள புகைப்படத்தை என்னிடம் காண்பித்தார்கள். அந்த பிரேதத்தில் வெட்டுப்பட்டிருந்தது. அந்த பிரேதத்தை என்னால் அடையாளம் காட்ட இயலவில்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தை காண்பித்து போலீசார்

என்னிடம் என் தம்பி குறித்து கேட்டனர். அந்த போட்டோவில் இடது கையில் KS தன்யாஸ்ரீ A என பச்சை குத்தியுள்ளது. அந்த போட்டோ அ.சா.ஆ.5.

என் தம்பி 2018 ம் வருடம் திருப்பூரில் வசித்து வந்தார். அவர் வருடத்திற்கு ஒருமுறை எனது சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம், கொப்பம்பட்டியிலுள்ள கோவில் திருவிழாவிற்கு சித்திரை மாதம் வருவார். அவர் வரும்போது, அவர் மனைவி குழந்தைகளுடன் வந்து செல்வார். 2019 ம் வருடம் நடந்த கோவில் திருவிழாவிற்கு என் தம்பி சொந்த ஊருக்கு வரவில்லை. அவரது மனைவி அழகுலெட்சுமியும், அவரது குழந்தைகளும் வந்தனர். அழகுலெட்சுமியிடம் கேட்டதற்கு, என் தம்பி 10 பவுன் நகையுடன் வேறொரு பெண்ணை கூட்டிக்கொண்டு ஓடிவிட்டார் என கூறினார். என் தம்பி ஒரு பெண்ணை கூட்டிபோய் விட்டார் என்பதால், நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நானும், என் மைத்துனர் நடராஜனும் கரூருக்கு வந்தபோது, போலீசார் எங்களை விசாரித்தனர். அதன்பிறகு என் அம்மாவை போலீசார் வரவழைத்து, கரூர், அரசு மருத்துவமனையில் இரத்தமாதிரி எடுத்தனர். அதன்பிறகு, என் அம்மா எல்லம்மாள் 09.01.2023 அன்று இறந்துபோனார். என் தம்பி அழகுலெட்சுமி நீதிமன்ற ஆஜரில் உள்ள 4 ம் எதிரி. அவரது அம்மா ஜெயலலிதா நீதிமன்ற ஆஜரில் உள்ள 5 ம் எதிரி ஆவார். சாட்சி செந்தில்குமார் என் உடன்பிறந்த தம்பி. அவரும் திருப்பூரில், இறந்துபோன என் தம்பி சுப்புராஜும் சேர்ந்து இனிப்புக்கடை வைத்திருந்தனர். சுப்புராஜ் திருமணத்திற்கு பிறகு, என் தம்பிகள் செந்தில்குமாரும், சுப்புராஜும் தனித்தனியாக கடை நடத்தி வந்தனர்.

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தனது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-3** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ்**, 4** ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் திருப்பூர் மாவட்டம், நல்லூரில் இனிப்புக்கடை நடத்தி வருகிறேன். எனது சொந்த ஊர் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி, கொப்பம் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.2 என் அண்ணன். என் தம்பி சுப்புராஜ். நானும், என் தம்பி சுப்புராஜும் நல்லூரில் இனிப்புக்கடை சேர்ந்து நடத்தி வந்தோம். என் தம்பி சுப்புராஜுக்கு 2009 ம் வருடத்தில், என் சொந்த ஊரான கொப்பம்பட்டியை சேர்ந்த

அழகுலெட்சுமி என்பவரை அவர் விருப்பத்தின்பேரில் திருமணம் செய்துக்கொண்டார். பின்னர், என் தம்பி கணக்கம்பாளையத்தில் தனியாக இனிப்புக்கடை மற்றும் கூல்ட்ரிங்ஸ் கடை நடத்தி வந்தார். கணக்கம்பாளையத்தில் என் தம்பி சுப்புராஜ், அவரது மனைவி அழகுலெட்சுமி, என் தம்பியின் மாமியார், என் தம்பியின் இரண்டு குழந்தைகள் ஆகியோருடன் கணக்கம்பாளையத்தில் வசித்து வந்தார். என் தம்பி சுப்புராஜ் அவரது இடது கையில் KS தன்யாஸ்ரீ A என பச்சை குத்தியிருந்தார். என் தம்பியும், அவரது குடும்பத்தினரும், கோவில் திருவிழாவிற்காக வருடத்திற்கு ஒருமுறை சொந்தஊரான கொப்பம்பட்டிக்கு வருவார்கள். 2018 ம் வருடம் என் தம்பி சுப்புராஜ் கோவில்திருவிழாவிற்கு வரவில்லை. சொந்த ஊரில் உள்ள கோவிலுக்கு என் தம்பி மனைவியும், என் தம்பி மாமியார் மற்றும் குழந்தைகள் வந்திருந்தனர். பக்கத்தில் உள்ளவர்கள் விசாரித்ததில், என் தம்பி 10 பவுன் நகையுடன் ஒரு பெண்ணை கூட்டிக்கொண்டு ஓடிவிட்டார் என தெரிவித்தனர். என் தம்பி எங்கே சென்றார் என தெரியவில்லை என தெரிவித்தனர். பின்னர், என் தம்பி இனிப்புக்கடை நடத்தி வந்த வீட்டு ஓனரிடம் விசாரித்ததில், காலி செய்து கரூருக்கு சென்றுவிட்டதாக தெரிவித்தார். நான் பின்னர், என் தம்பியை பெங்களூர், ஆந்திரா உள்ளிட்ட இடங்களில் தேடிப்பார்த்தோம், கிடைக்கவில்லை. பெங்களூரில் என் தம்பி அவரது சிறுவயதில் வேலை பார்த்ததால் அங்கு சென்று தேடினேன். ஆந்திராவில் நான் சிறு வயதில் வேலை பார்த்ததாலும், என் மாமா அங்கு இனிப்புக்கடை நடத்தி வந்ததாலும் அங்கு சென்று தேடினோம். பின்னர், என் தம்பி மனைவி அழகுலெட்சுமி என் அம்மாவிடம் வந்து சொத்து கேட்டார். என் அம்மா, என் தம்பி வந்தபிறகு சொத்து தருவதாக கூறினார்.

பின்னர், தேர்தல் சமயத்தில் போலீசார் என் சொந்த ஊருக்கு வந்து, அழகுலெட்சுமியையும், அவரது அம்மாவையும் கைது செய்த விவரம் தெரிந்து, நான் என் சொந்தஊரான கொப்பம்பட்டிக்கு வந்தேன். பின்னர், கரூரில் உள்ள பசுபதிபாளையம் காவல்நிலையத்திற்கு சென்றேன். பின்னர் போலீசார் காவல்நிலையத்தில் வைத்து என் தம்பியின் புகைப்படத்தை காண்பித்தார்கள். அந்த புகைப்படத்தில் ஒரு கையில் KS தன்யாஸ்ரீ A என பச்சை குத்தியிருந்தது.

அந்த புகைப்படம் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.5 ஆகும்.

பின்னர், என் அம்மாவை ஊரில் இருந்து வரவழைத்து, கரூர், அரசு மருத்துவமனையில் வைத்து DNA பரிசோதனைக்காக என் அம்மாவிடமிருந்து இரத்தமாதிரி சேகரித்தனர். இரத்தமாதிரி எடுப்பதற்கு என் சொந்த ஊரான கொப்பம்பட்டியிலிருந்து நானும், என் அண்ணனும் அழைத்து வந்தோம். என் அம்மாவிடமிருந்து இரத்தமாதிரி சேகரித்தபோது, நானும், என் அண்ணனும் உடனிருந்தோம். அதன்பிறகு 2023 ம் வருடம் என் அம்மா இறந்துவிட்டார்.

இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-4** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : மோகன்ராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ்**, 4** ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவிமைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் கரூர், வெள்ளாளப்பட்டி, தில்லைநகர், 1 வது கிராஸில் வசித்து வந்து, அரிசிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். நான் குடியிருந்து வரும் கதவு எண். 110, தில்லைநகரில் உள்ள வீடு எனது சொந்த வீடாகும். அதில் தரைதளத்தில் ஒருவீடும், மாடியில் ஒருவீடும் உள்ளது. நான் தரைதளத்தில் குடியிருந்து வந்தேன். மேல்மாடியில் வாடகைக்கு விட்டிருந்தேன். 2018 ம் .....

வருடம் கனகராஜ் என்பவருக்கு மாதவாடகை ரூ.3000/-க்கு புரோக்கர் மூலமாக எனது மேல்மாடியை வாடகைக்கு விட்டேன். எனது மேல்மாடியில் கனகராஜ், அவரது மனைவியும், குழந்தைகள் இருவர், வயதான ஒரு பெண்மணியும் ஆகியோர் குடியிருந்து வந்தனர். சுமார் ஒருவருட காலம் அவர்கள் என் வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தனர். கனகராஜின் மனைவி பெயர் அழகுலெட்சுமி. குழந்தைகள் பெயர் கௌசிக், தன்யாஸ்ரீ, வயதான பெண்மணி பெயர் லலிதா. அவர் கனகராஜின் மாமியார். மேற்சொன்ன நபர்கள் சொல்லி அந்த விவரம் எனக்கு தெரியும். பின்னர், என் மகனுக்கு திருமணம் என்பதால் வீடு தேவைப்படுகிறது என சொன்னேன், அதன்பிறகு கனகராஜும், அவர் குடும்பத்தினரும் வீட்டை காலி செய்து, சொந்த ஊருக்கு செல்வதாக சொல்லி சென்றனர். நீதிமன்ற ஆஜரில் முதலாவது நபராக இருப்பவர் கனகராஜ் ஆவார். நீதிமன்ற ஆஜரில் நான்காவது நபராக இருப்பவர் கனகராஜின் மனைவி அழகுலெட்சுமி. நீதிமன்ற ஆஜரில் ஐந்தாவது நபராக இருப்பவர் கனகராஜின் மாமியார் லலிதா. கனகராஜின் மகன் கௌசிக் என்பவர் மட்டும் எனது வீட்டிற்கு எதிர்புறம் உள்ள குழந்தையேசு என்ற பள்ளியில் படித்தார்.

2019 லிருந்து மூன்று வருடங்களுக்கு பிறகு ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,<br>மாவட்ட அமர்வு நீதிபதி,<br>கரூர்.

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**</u>

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-5** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : லோகநாயகி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ், **2** ம் எதிரி சந்தோஷ்குமார், **3** ம் எதிரி பிரகாஷ், **4** ம் எதிரி அழகுலெட்சுமி (அம்மு), **5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

<u>முதல் விசாரணை</u>

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் திருப்பூர் மாவட்டம், கணக்கம்பாளையம் பிரிவில் வசித்து வந்து, SS சிக்கன் என்ற பெயரில் கோழிக்கறிக்கடை வைத்துள்ளேன். சாட்சி ராஜேஸ்குமார் என் மகன். அவர் தற்போது திருப்பூரைச்சேர்ந்த ஒரு கம்பெனியில் பொள்ளாச்சியில் வேலை பார்த்து வருகிறார். என் கறிக்கடை அருகில் சுப்புராஜ் என்பவர் தன்யாஸ்ரீ என்ற பெயரில் இனிப்பு மற்றும் ஜூஸ் கடை நடத்தி வந்தார்.

சுப்புராஜ் கடையில் அவருடைய மாமியார், அவரது மனைவி, அவரது இரண்டு குழந்தைகள் ஆகியோர் இருந்து வந்தனர். பக்கத்தில் வீடு வாடகைக்கு எடுத்து வசித்து வந்தனர். சுப்புராஜ், அவரது மாமியார், அவரது மனைவி, அவரது இரண்டு குழந்தைகள் ஆகியோரை எனக்கு தெரியும். நீதிமன்ற ஆஜரில் நான்காவது நபராக உள்ளவர் சுப்புராஜின் மனைவி. அவரை அம்மு என்று அழைப்பார்கள். நீதிமன்ற ஆஜரில் ஐந்தாவது நபராக உள்ளவர் சுப்புராஜின் மாமியார். அவரது பெயர் ஜெயலலிதா. நான் நடத்தி வந்த SS சிக்கன் கறிக்கடையில் கனகராஜ் என்பவர் வேலை பார்த்து வந்தார். அவரது சொந்த ஊர் கரூர். நீதிமன்ற ஆஜரில் பச்சை நிற சட்டை அணிந்து, முதலாவதாக உள்ள 1 வது எதிரி கனகராஜ். கனகராஜ் என் கறிக்கடையில் ஒருவருடம் வேலை பார்த்தார். 2019 – 2020 வருடத்திற்குள் இருக்கும். எங்கள் கடையின் கட்டிட உரிமையாளர் கடையை இடித்துக்கட்ட வேண்டும் என கனது கடையையும், சுப்புராஜ் கடையையும் காலி செய்ய வேண்டும் என கேட்டதால், நாங்கள் கடையை காலி செய்துவிட்டோம். ஆறுவருடங்களுக்கு முன்பு கடையை காலி செய்துவிட்டோம். நான் கடையை காலி செய்த ஒருமாதத்தில் சுப்புராஜும் கடையை காலி செய்துவிட்டார். கனகராஜ் கடையில் சிறு சிறு சண்டைகள் போட்டு வந்தார். சுப்புராஜ் நடத்தி வந்த தன்யாஸ்ரீ கூல்ட்டிரிங்ஸ் கடையை அவரது மனைவியும், மாமியாரும் வந்து நடத்துவார்கள். 1ம் எதிரி கனகராஜின் அண்ணனை நான் ஒருமுறை பார்த்துள்ளேன். கனகராஜ் வேலையை விட்டு நின்றபிறகு, அவரது அண்ணன் எனக்கு ஒருமுறை போன் செய்து விசாரித்தார். அப்போது 1 வது எதிரியின் அண்ணன் என்னிடம் எதிரி கனகராஜிற்கு திருமணம் ஆகிவிட்டதா என்றும், என்னிடம் சொத்து கேட்கிறான் என்றும் விசாரித்தார். நான் தெரியாது என்று கூறினேன். 1 வது எதிரி கனகராஜ் சுப்புராஜ் கடைக்கு சென்று அங்குள்ள சுப்புராஜ், அவரது மனைவி, அவரது மாமியார் ஆகியோரிடம் பேசுவார். கனகராஜ் என்னிடம் வேலை பார்த்தபோது கார் வைத்திருந்தார். அவரது காரில், ஊரிலிருந்து வரும் சுப்புராஜின் மனைவி, மாமியார் ஆகியோரை பஸ்டாண்டிலிருந்து கனகராஜ், சுப்புராஜ் வீட்டிற்கு அழைத்து வருவார். .......

இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். இறந்துபோன சுப்புராஜ் அவரது கையில் தன்யாஸ்ரீ என பச்சை குத்தியிருந்தார். எந்த கை என ஞாபகமில்லை. போலீசார் என்னை விசாரித்தபோது, புகைப்படத்தை காண்பித்து விசாரித்தார்கள். அந்த போட்டோவில் உள்ள நபரை பார்த்து, அவர் என் கடைக்கு பக்கத்தில் ஜூஸ் கடை வைத்திருந்த சுப்புராஜ் என்று கூறினேன். போலீசார் என்னிடம் காட்டிய புகைப்படம் நீதிமன்றத்தில் உள்ள அ.சா.ஆ.5 ஆகும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-6** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : குமரேசன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ்**, 4** ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் கரூர், சணப்பிரட்டியில் வசித்து வந்து, மாநகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் குப்பை லாரி ஓட்டுநராக வேலை பார்க்கிறேன். நான் 2016 ம் வருடம் TN 72 AA 9303 என்ற மாருதி ஆம்னி வேன் வாங்கி, வாடகைக்கு ஓட்டி வந்தேன். 2019 ம் வருடம் ஒருநாள் இரவு போலீசார் வந்து என்னிடம் விசாரித்தார்கள். அப்போது போலீசாரிடம் எனது வண்டியை ஒப்படைத்தேன்.

1 வது எதிரி கனகராஜை நான் பார்த்துள்ளேன். நான் அவருக்கு எனது வண்டியை கொடுத்ததில்லை. 3 வது எதிரி பிரகாஷ் என்பவரை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

கடந்த 09.02.2018 அன்று மாலை 4.00 மணியளவில் நான் வீட்டிலிருந்தபோது, அங்கு வந்த என் நண்பரான வெள்ளாளப்பட்டியை சேர்ந்த கனகராஜ் என்பவர் கரூருக்கு சென்றுவருவதாக கூறி, எனது ஆம்னிவேனை கேட்டதால் நான் கொடுத்தனுப்பினேன் என்றும், பின்னர் அன்றைய தினம் இரவு 10.00 மணிக்கு நான் வீட்டிலிருந்தபோது, எனது ஆம்னிவேனை கனகராஜ் ஓட்டி வந்து எனது வீட்டிற்கு அருகில் நிறுத்தினார் என்றும், அப்போது கனகராஜும், பிரகாசும் கையில் அருவாளுடன் இறங்கி வந்து, கனகராஜ் எனது வேன் சாவியை கொடுத்து சென்றார் என்றும், நான் கனகராஜிடம் அருவாளுடன் எங்கே செல்கிறாய் என்று கேட்டதற்கு, நாளை வேலைக்கு அருவாள் தேவைப்படுகிறது என்று சொல்லி சென்றார் என்றும், பின்னர் 10.02.2018 அன்று காலையில் எனது வேனை நான் சுத்தம்செய்தபோது, வேனின் பின்பக்கம் விரித்திருந்த கருப்புகலரில் இருந்த கால்மிதி சுமார் 2 ½ அடி நீளத்திற்கு இல்லை என்றும், அதுபற்றி நான் கனகராஜிடம் கேட்டதற்கு, வழியில் விழுந்துவிட்டது என்று சொன்னார் என்றும், பின்னர் 11.04.2018 அன்று நான் வீட்டிலிருந்தபோது, பசுபதிபாளையம் வட்ட ஆய்வாளர் கோபாலகிருஷ்ணன், சணப்பிரட்டி கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோருடன் சேர்ந்து சந்தோஷ்குமார் என்பவரை அழைத்து வந்தார்கள் என்றும், அப்போது சந்தோஷ்குமார் எனது வீட்டில் நிறுத்தியிருந்த ஆம்னி வேனை அடையாளம் காட்டினார் என்றும், பின்னர், என்னுடைய TN 72 AA 9303 என்ற ஆம்னிவேனை வழக்கு சம்மந்தமாக போலீசார் கைப்பற்றி எனடுத்துச்சென்றனர் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும், தற்போது 1 ம் எதிரி என் நண்பர் என்பதாலும், 2 ம் எதிரி பல வழக்குகளில் தொடர்புடையவர் என்பதாலும்

அவருக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 19/2022 | |
| | : | Prosecution - | **PW-7** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சுரேஷ்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 01st day of July 2024.

**(1** ம் எதிரி கனகராஜ்**, 2** ம் எதிரி சந்தோஷ்குமார்**, 3** ம் எதிரி பிரகாஷ்**, 4** ம் எதிரி அழகுலெட்சுமி **(**அம்மு**), 5** ம் எதிரி ஜெயலலிதா ஆகிய **1** முதல் **5** எதிரிகள் ஆஜர்**)**

முதல் விசாரணை

(எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் முன்னிலையில்லை. அரசு செலவில் அல்லது சட்ட உதவி மைய வழக்கறிஞரை வைத்து வழக்கு நடத்துவதற்கு எதிரிகளிடம் கேட்டபோது, எதிரிகள் தங்களுடைய வழக்கறிஞரை வைத்துதான் வழக்கை நடத்தவேண்டும் என தெரிவித்தனர்)

நான் தற்போது மண்மங்கலம் வட்டம், கோயம்பள்ளி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 11.04.2021 அன்று கரூர் வட்டம், சணப்பிரட்டி கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வந்தேன். அப்போது மேலப்பாளையம் கிராம நிர்வாக அதிகாரியாக கூடுதல் பொறுப்பு வகித்தேன். மேலப்பாளையம் கிராம உதவியாளராக சிவப்பிரகாசம் என்பவர் ....

பணிபுரிந்து வந்தார். 11.04.2021 அன்று காலை 10.30 மணிக்கு மேலப்பாளையம் கிராம நிர்வாக அலுவலகத்தில் நான் பணியிலிருந்தபோது, பசுபதிபாளையம் காவல் ஆய்வாளர் எனக்கு போன் செய்து, ஒரு குற்றவழக்கு சம்மந்தமாக ஒரு நபரை கைது செய்துள்ளோம் என்றும், அவரை விசாரிக்கும்போது சாட்சியாக இருக்க வேண்டும் என என்னையும், என் கிராம உதவியாளரையும் வருமாறு அழைத்தார். அதன்பேரில் நானும், என் கிராம உதவியாளர் சிவப்பிரகாசும் பசுபதிபாளையட்ம காவல்நிலையத்திற்கு காலை 11.00 மணியளவில் சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் கனகராஜ் என்பவரை காண்பித்து, அவரை விசாரித்தார். அப்போது, கனகராஜ் என்பவர் பசுபதிபாளையம் கா.நி.கு.எண். 82/2018 வழக்கு சம்மந்தமாக தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்நிலையத்தில் உள்ள கணிணி காவலர் கணிணியில் தட்டச்சு செய்து, பிரிண்ட் எடுத்தார். பின்னர் ஆய்வாளர் கனகராஜிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து பெற்றார். அதில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அதில் காவல் ஆய்வாளரும் கையெழுத்திட்டார். பின்னர், கனகராஜ் என்பவர் அவரை அழைத்துச்சென்றால் சம்பவ இடத்தையும், மறைத்து வைத்திருந்த ஆயுதத்தையும் எடுத்து தருவதாக சொன்னார். அதன்பேரில், பகல் 1.30 மணியளவில் காவல் ஆய்வாளர், நான், எனது கிராம உதவியாளர், காவலர்கள் மற்றும் கனகராஜுடன் தொழிற்பேட்டை, நரிக்கட்டியூரில் உள்ள கனகராஜ் வீட்டிற்கு எங்களை அழைத்துச்சென்றார். அங்கு கனகராஜ் வீட்டில் உள்ள மோட்டார் ரூமில் உள்ள ஒரு சந்தில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து ஆய்வாளரிடம் ஆஜர் செய்ததை, ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த மகஜர் அ.சா.ஆ.6. அதில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து எனது கிராம உதவியாளருடையது. ஆய்வாளர் கைப்பற்றிய அருவாள், நீதிமன்றத்தில் உள்ள அருவாள்களில் பெரிதாக உள்ள அருவாள். அது சா.பொ.8. எதிரி ...........

கனகராஜ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எனது சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.7. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8. பின்னர், கைப்பற்றிய அருவாள் மற்றும் எதிரியுடன் காவல்நிலையத்திற்கு திரும்பி வந்தோம். பின்னர், எனது பணிக்கு திரும்பிவிட்டேன்.

பின்னர், மீண்டும் பிற்பகல் 3.00 மணியளவில் அதே வழக்கு சம்மந்தமாக, கரூர், தெரசா கார்னர் பகுதியில் சந்தோஷ்குமார் என்பவரை கைது செய்திருப்பதாகவும், அவரை விசாரிப்பதற்கு சாட்சியாக இருக்குமாறும், என்னையும், எனது கிராம உதவியாளரையும் அழைத்தார். அதன்பேரில் 3.15 மணியளவில் நானும், எனது உதவியாளரும் கரூர், தெரசா கார்னர் பகுதிக்கு சென்றோம். அங்கு காவல் ஆய்வாளர் அவர் கைது செய்து வைத்திருந்த சந்தோஷ்குமார் எ ன்பவரை எங்கள் முன்னிலையில் விசாரித்தார். அப்போது எதிரி சந்தோஷ்குமார் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் பதிவு செய்து, எதிரியிடம் கையெழுத்து போட்டார். அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். எதிரி சந்தோஷ்குமார் தன்னை அழைத்துச்சென்றார், சம்பவ இடத்தையும், ஆம்னி வேனையும் அடையாளம் காட்டுவதாக கூறினார். அதன்பேரில், எதிரி சந்தோஷ்குமாருடன், காவல் ஆய்வாளர், நான், கிராம உதவியாளர் மற்றும் காவலர்களுடன் சணப்பிரட்டியிலுள்ள குமரேசன் என்பவர் வீட்டிற்கு அழைத்துச்சென்று, அவர் வீட்டிலிருந்த இளம் நீலநிற வண்ணத்திலிருந்த TN 72 AA 9303 என்ற ஆம்னிவேனை அடையாளம் காட்டியதை, ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயாரித்து கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து எனது கிராம நிர்வாக அலுவலருடையது. ஆய்வாளர் கைப்பற்றிய மாருதி ஆம்னி வேன் நீதிமன்ற அரங்கிற்கு வெளியே உள்ளது. அது சா.பொ.9. அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.9. பின்னர், எதிரி சந்தோஷ்குமாரை ........

கைப்பற்றிய சொத்துடன் காவல்நிலையத்திற்கு கொண்டு வந்து, நான் எனது பணிக்கு சென்றுவிட்டேன்

12.04.2021 அன்று காலை 11.00 மணியளவில் பசுபதிபாளையம் காவல்நிலையம் என்னை தொடர்புகொண்டு, இதே வழககு சம்மந்தமாக அம்மு (எ) அழகுலெட்சுமியை கைது செய்திருப்பதாகவும், அவரை விசாரிப்பதற்கு சாட்சியாக இருக்குமாறு அழைத்தார். அதன்பேரில் 11.15 மணிக்கு நானும், எனது உதவியாளரும் காவல்நிலையம் சென்றோம். அங்கு ஆய்வாளர் கைது செய்து வைத்திருந்த அம்மு (எ) அழகுலெட்சுமியை எங்கள் இருவர் முன்னிலையில் விசாரித்தார். அப்போது அம்மு (எ) அழகுலெட்சுமி தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தைஎ ங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடம் கையெழுத்து வாங்கினார். அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் அம்மு (எ) அழகுலெட்சுமி வைத்திருந்த இரண்டு போட்டோக்களை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.10. அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து எனது கிராம உதவியாளருடையது. ஆய்வாளர் கைப்பற்றிய புகைப்படங்கள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.10 மற்றும் சா.பொ.11. பின்னர், நாங்கள் எங்கள் அலுவலகப்பணிக்கு திரும்பிவிட்டோம்.

பின்னர் மீண்டும் அன்றைய தினம் மதியம் 3.00 மணியளவில் பசுபதிபாளையம் காவல்நிலையம் என்னை தொடர்புகொண்டு, இதே வழககு சம்மந்தமாக பிரகாஷ் என்பவரை கைது செய்திருப்பதாகவும், அவரை விசாரிப்பதற்கு சாட்சியாக இருக்குமாறு அழைத்தார். அதன்பேரில் 3.15 மணிக்கு நானும், எனது உதவியாளரும் காவல்நிலையம் சென்றோம். அங்கு ஆய்வாளர் கைது செய்து வைத்திருந்த பிரகாஷ் என்பவரை எங்கள் இருவர் முன்னிலையில் விசாரித்தார். அப்போது பிரகாஷ் என்பவர் தாமாக முன்வந்து அளித்த ஒப்புதல்

வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரியிடம் கையெழுத்து வாங்கினார். அதில் நாங்கள் சாட்சி கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரி பிரகாஷ் தன்னை அழைத்துச்சென்றால், அவரது வீட்டில் மறைத்து வைத்துள்ள அருவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அதன்பேரில் எதிரி பிரகாஷ், ஆய்வாளர், நான், கிராம உதவியாளர் மற்றும் காவலர்களுடன் எதிரி பிரகாஷ் என்பவரின் வீடான தில்லைநகரில், 2 வது கிராசில் உள்ள அவர் வீட்டிற்கு சென்றோம். அங்கு பிரகாஷ் என்பவர் வீட்டில் ஸ்டோர்ரூமில் உள்ள செல்பில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து பிரகாஷ் என்பவர் ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், என் உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.11. அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து எனது கிராம உதவியாளருடையது. ஆய்வாளர் கைப்பற்றிய அருவாள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.12. எதிரி பிரகாஷ் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது. அவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.12. பின்னர், எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துடன் காவல்நிலையத்திற்கு திரும்பினோம். பின்னர், நாங்கள் எங்கள் அலுவலகப்பணிக்கு திரும்பிவிட்டோம்.

இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரிகள் தங்களது வழக்கறிஞரை வைத்துதான் குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என தெரிவித்தனர். எனவே சாட்சி குவிமுச பிரிவு 309 2 வது விலக்கு வாசகத்தின்படி குறுக்கு விசாரணை செய்வதிலிருந்து விலக்களிக்கப்படுகிறார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.